1995 மார்ச் 15]

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக் கழக நல்கைக் குழுவின் தலைவர் எதிர்பாராத வகையில் திடீரென்று இங்கே வந்தார். வந்த நேரத்திலே ஒருநாள் மாலை கல்வி அமைச்சரைச் சந்திக்க வேண்டுமென்று தெரிவித்தார். ஆகவே அந்தச் சந்திப்பு நடைபெற்றது. இப்போது அவர் பல்கலைக் கழக மானியக் குழுவின் தலைவராக இல்லை.. மரியாதைக்குரிய பெண்மணி ஒருவர் தலைவராக இருக்கிறார். அவர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சந்திக்கின்ற வாய்ப்பு அமையுமானால், அதை ஏற்படுத்துவதற்குக் கல்வித் துறை எப்போதும் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்து, இதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 17, திரு. ஏ. கே. சி. சுந்தரவேல், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

17—

திருப்பத்தூர் தொகுதியில்

அரசு தொழிற்பயிற்சி மையம் தொடங்குதல்

33720*--திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருப்பத்தூர் தொகுதியில் அரசு தொழிற்பயிற்சி மையம் (I.T.I.) தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம் திருப்பத்தூர் தாலூக்கா மிகவும் பின்தங்கிய தாலூக்கா. அங்கே படித்த இளைஞர்கள் அதிகம்

இருக்கிறார்கள். படித்த இளைஞர்கள் வாழ்க்கையிலே உயர வேண்டுமென்ற நல்ல எண்ணம் கொண்ட எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசு, அரசு தொழிற்பயிற்சி மையம் ஒன்று திருப்பத்தூரில் தொடங்க ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. எம் பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 100 இருக்கைகள் கொண்ட ஒரு அரசு தொழிற்பயிற்சி மையம் துவங்க வேண்டுமானால் தொடரினச் செலவாக ரூ. 5 இலட்சமும், தொடரா இனச் செலவாக ரூ. 55 இலட்சமும், ஆக ரூ. 60 இலட்சம் செலவு ஆகின்றது. தற்போதுள்ள நிதி நிலை நெருக்கடியைக் கருத்திற் கொண்டும், தொழிற்பயிற்சி பயின்று வேலைக்காகக் காத்திருப்பார் அதிகமாக இருப்பதாலும், மேலும் ஒரு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கத் தேவையில்லை என அரசு கருதுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 18, டாக்டர் மு. சீனியம்மாள், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

18—

நீலிப்பாளையத்தில் குடிநீர் வழங்குதல்

*22458—டாக்டர் மு. சீனியம்மாள்:

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி தொகுதி, நீலிப்பாளையத்தில் குடிநீர்த் தொட்டி கட்டி, காற்றழுத்த மின்மோட்டார் பொருத்தி குடிநீர் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும்?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வினா எழ இடமில்லை.

(ஆ) ஏற்கனவே அவிநாசி ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் நீலிப்பாளையத்திற்காக ஒரு தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு தற்போது Air Compressor காற்றழுத்த மின்மோட்டார்